**நாவுல பிரதேச சபையி - 2024**
**------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவுல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவுல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஜன உதான கம சிறுவர் பூங்காவின் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. . | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா. 4,538,383 மூலதனமாக்கப்பட வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு மீதிகளுக்குரிய மீதிகள், அட்டவணைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா. 716,298 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | 2025 இற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்கு மீதிகள் உரிய உப அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டம்** | | | |
| 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் 2021 ஜுலை 08 திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை / பிரமாணம் VI பகுதி 83 ஆம் பிரிவு | 2020 – 2024 காலகட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 152 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி. 571(3) | 2013 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப் பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 824,050 ஆன காலாவதியான 52 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | நி.பி 571 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,137,119 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 112,140 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 1,925,496 | 1,679,446 | 1,376,126 | 1,624,722 | 1,596,527 | 1,612,982 | 2,521,221 | 1,321,068 |
| (ii). வாடகை | 4,534,200 | 2,617,440 | 2,939,235 | 532,430 | 2,224,200 | 1,108,250 | 1,029,180 | 854,225 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,489,000 | 2,079,342 | 2,079,342 | - | 2,655,000 | 2,014,985 | 2,014,985 | - |
| (iv). ஏனைய வருமானம் | 22,454,500 | 15,940,962 | 14,838,056 | 2,157,808 | 3,000,000 | 3,205,548 | 2,943,948 | 1,054,902 |
| மொத்தம் | 31,403,196 | 22,317,190 | 21,232,759 | 4,314,960 | 9,475,727 | 7,941,765 | 8,509,334 | 3,230,195 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,624,722 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் அலகொன்று ரூபா 5,000 ஐ | எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவைத் வருமானம் அறவிடப்பட வேண்டும். |

மிகைத்த 68 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 780,710 ஆன நிலுவை வீதவரி மீதியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) எதிர்பார்த்த நன்மைகளை அடையத் தவறுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள், சபை சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,445,173 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 12,380,309 தொகை நடைமுறைக் கணக்கில் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | 2025 ஆம் ஆண்டில் நிலையான வைப்புத் தொகைகள் வருமானம் ஈட்டும் செயற்திட்டங் களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாக். | மிகை நிதியை பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும். |

**(ஆ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிர்வாகக் கட்டிடத்தின் கீழ் மாடியை கடைகளாக மாற்றுவதற்கான கடந்த ஆண்டு மே 21 ஆந் திகதி ரூபா 5,510,633 இற்கு நிர்மாணப் பணிகள் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பணிகளை முடித்து கடைகளை குத்தகைக்கு விட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | நிர்மாணப் பணிகளை முடித்து கடைகளை விரைவாக குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் 1,827,556 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 101,480 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 64,323 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டு பிரித்து விற்கப்பட்ட அரங்கல ஹபரகஹவத்த காணியிலிருந்து சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 51.88 பேர்ச் காணிக்குரிய ரூபா 1,678,305 தொகையை சபைக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்திடமிருந்து அறிக்கைகள் பெறப்படாத காரணத்தினால், பிரிக்கப்பட்ட காணியை பிரதேச சபையின் அங்கீகரிக்காதிருக்கும் போது அககாணியின் காணித்துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அம்பன் ரஜாவெல நீர் செயற் திட்டத்தின் 03 பிரிவுகளுடன் கூடிய 04 காணி கட்டிடங்கள் மற்றும் 1 ஏக்கர் 34 பேர்ச் அளவிலான ஓபல்கல விளையாட்டு மைதானம் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்றப்பட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் பராமரிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற கனமுலயாயவில் உள்ள சிறுவர் பூங்கா 2021 முதல் பயன்படுத்தப்படாமல் குறைப் பயன்பாட்டில் காணப்படுகின்றது. | சிறுவர்கள் பூங்காவில் உள்ள விளையாட்டு உபகரணங்களை பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்த ஏற்றதாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதாக. | பழுது பார்த்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். |
| (ஆ) | சபையால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா. 32,172,696 கூட்டுத் தொகையான , 03 இயந்திரங்கள் மற்றும் 02 டிராக்டர் டிரெய்லர்கள் என்பன 09 மாதங்கள் முதல் 06 ஆண்டுகள் வரை செயலற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுவதாக இருந்தன. | எதிர்காலத்தில் பழுதுபார்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | சொத்துக்களை செயலற்ற நிலையில் இருக்க இடமளிக்கப்படாமல், பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது, சமூக நடவடிக்கைகளுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த 03 காணித் துண்டுகளில் 06 ரூட் மற்றும் 56.98 பேர்ச் அளவுள்ள மற்றும் சபையால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா. 61,000,000 பெறுமதியான 15 காணித் துண்டுகளையும், மொரகஹகந்த களு கங்கை திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 10 கடைகளுடன் கூடிய காணியைக் கையேற்ககப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் பொழுது 13 பதவிகளில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |

## 3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 300,000 பெறுமதியான 02 மோட்டார் சைக்கில்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கதவில்லை. | எதிர்காலத்தில் சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |